
சிவத்திரு: மெய்யப்ப சுவாமிகள்

[ஆக்கர்: ஸ்ரீ சொக்கலிங்க ஐயா]



வெளியிடுவோர்:
ஸ்ரீ சொக்கலிங்க ஐயா சொற்றமிழ்ச் சங்கத்தார்
காரைக்குடி

உ

சிவமயம்

பதிப்புரை

கலைமகள் களிதரும் காரைக்குடியில் அவதரித்த ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கமே இந்நூல். இதனை இயற்றியவர், சுவாமிகளின் தலை மாணாக்கரும் காரைக்குடிசிவஞானக் கலைச்செல்வருமான ஸ்ரீ ராம. சொ. சொக்கலிங்கம் செட்டியார் என்ற ஸ்ரீ சொக்கலிங்க ஐயா அவர்களே யாவர். 42 ஆண்டு களுக்கு முன்னர் சுவாமிகளின் பேரர் ஸ்ரீ மெ. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்களால் 2-ம் முறையாக வெளியிடப்பெற்ற இந்நூலின் தமிழ்நடையைச் சந்தி பிரித்து எளிதாக்கி 3-ம்முறையாக வெளியிடுகின்றோம்.


தமிழ்நாட்டின் தலைநகராய் விளங்கும் மதுரையம் பதியின் கலைக்கூடமே ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் ஆலயம். அதனைப் பழுதுருது பாதுகாத்தலும் புதுப்பித்தலும் பிறவிக்கடனாய்க்கொண்டு பெருந்தகை சர். பி.டி. ராஜன் அவர்கள் முயற்சியால், பெரும்பொருள் செலவில் திருப் பணிகள் செய்தும் புதுப்பித்தும் கும்பாபிஷேகம் நடக்க இருக்கும் இந்நந்நாளில், இற்றைக்கு நீண்ட நாள் முன்னர் நாயக்க மன்னர் காலத்தின் பின்னர், அவ்வால யத்தின் சீர்திருத்தப் பணிகள் பல செய்து பிறவிப் பெருங் கடல் நீந்திக் கரைசேர்ந்த ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகளின் வரலாறும், அவர்கள் பணிக்கெல்லாம் மனமுவந்து பெரும்பொருள் நல்கித் திருவருள் பேறுபெற்ற அமரா வதிபுத்தூர் வயி. நாக. ராம. நாகப்ப செட்டியார், வேங்கடாசலம் செட்டியார், ஆகியோரின் சிவானுபூதிச் சிறப்புக்களும் நற்பயன் விளைவிக்குமெனக் கருதுகின்

றோம். அதிலும், சுவாமிகளின் மாணுக்கர் ஸ்ரீ சொக்க லிங்க ஐயா பெயரால் நடைபெற்றுவரும் இச்சங்கம், தனது இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை, மதுரை மணி நகரத்திலுள்ள ஸ்ரீ மெய்யப்ப சுவாமி களின் ஆலயத்தில் [சுவாமிகள் ஆலயம் அமராவதி புத்தூர் வயிநாகரம் குடும்பத்தினராகிய ஸ்ரீ சோம. கருப்பஞ்செட்டியார் அவர்களால் நிர்வகிக்கப் பெறு கிறது.] மடாலயத்திலே கொண்டாடுவதும், சோபகிருது ஆனி 14-ம் நாள் வெள்ளிக்கிழமையும் ஸ்ரீ மீனுட்சிசுந்த ரேசர் ஆலயக் கும்பாபிஷேக தினமும் ஆகிய இச் சுப தினத்தன்று இந்நூலை வெளியிடுவதும், இறையருள் செயலே என மகிழ்ச்சி யடைகின்றோம். இச்சங்கத்தின் தலைவராய் நின்று செயலாற்றும் முகவை மாவட்ட இந்து அறநிலையப் பாதுகாப்புக்குழு உறுப்பினர் காரைக்குடி ஸ்ரீ ஆறு.ஆ.ராம. சொக்கலிங்கம்செட்டியார் அவர்களின் நன்முயற்சியை இச்சங்கம் பாராட்டுகிறது. நூல் நற்பயன் தர இறையருளை வேண்டுகிறேன்.

ஐயா மாணுக்கன்

சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்
காரியதரிசி
ஸ்ரீ சொக்கலிங்கஐயா சொற்றமிழ்ச்சங்கம்

காரைக்குடி
28—6—63



சிவத்திரு : சொக்கலிங்க ஐயா

ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகளின் பேத்தி புதல்வரும்
ஸ்ரீ சொக்கலிங்க ஐயா அவர்கள் மாணுக்கருமான
ஸ்ரீ ராம. திருநாவுக்கரசு செட்டியார் அவர்களின்

சிறப்புப் பாயிரம்

பொன்மாது கலைமாது புகழ்மாது
சிவஞானப் புனிதமாது
முன்மாதர் திகழ்மதுரை முதுபதியெல்
லையைக்கடவா முனிவர் கோமான்
என்மாதா பிதாமகரென் றேத்துறுமெய்
யப்பசுவா மியின்ருட் கேய்ந்த
நன்மாலைப் பதிற்றுப்பத் தந்தாதி
சரிதமுட னயப்பச் செய்தான்.

தென்னவனுட் டிற்காரைத் திருநகரிற்
கல்விநலஞ் சிறப்ப வாழ்வோன்
நன்னயமா வணிகர்குலத் திராமனு
தப்பெரியோ னயந்து பெற்ற
தன்மைமிகு மென்னுசான் பிள்ளையார்
பட்டியெனும் தனிப்பேர் பூண்ட
பொன்னகர்வாழ் கோயிலினன் மெய்ஞ்ஞானத்
திறமுணர்த்தும் புனிதமூர்த்தி.

என்போன்ற சிற்றறிவோர்க் கெளிதாகப்
பலநூல்க ளிசைத்தன் போடு
நன்பார்ந்த நெறியறியும் படியோதி
நலம்புரியு நாவலோன் செம்
பொன்போன்ற சடைக்கொன்றைப் புதுமாலை
யணிபரமன் பூம்பா தத்தி
லன்பார்ந்து கனிமனத்தான் சொக்கலிங்க
தேசிகன் மெய்யறிவன் மாதோ!

—0—

உ

கணபதிதுணை

ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள் சரித்திர சங்கிரகம்

[ஸ்ரீ சொக்கலிங்க ஐயா அருளியது]

அம்மையோ டப்ப னீயென் றனைத்துள சுற்ற மாவார்
தம்மையோர்ந் திழந்து வாழுந் தனிப்பெருந் தொண்ட ரென்று
மெம்மய றீர வெண்ணி யிந்நெறி யொழுக நல்காய்
செம்மையா ரால வாயிற் றிகழுமெய் யப்ப தேவே!

ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள், பாண்டி நாட்டிலே புராதன சிவ ஸ்தலங்களுள் ஒன்றுயதும், மதுப்பிரிய முனிவர் முதலிய ஆன்றோர்கள் பூசித்துப் பேறுபெற்ற சிறப்புடையதுமான கோயிலூர் என்னும் சமிவன சாமீப்பியம் பெற்று, அதன் கீழ்த்திசையிலுள்ள காரைக்குடியிலே, தனவைசியர் குலத்திலே, இளையாற்றக்குடிக் கோயில் கழனிவாசல் குடிவகுப்பிலே, மெய்யப்ப செட்டியார் என்னும் புண்ணிய சீலர், பூர்வ சென்மங்களில் புரிந்து வந்த பெருந்தவத்தால், ஒரு சற்புத்திரராய் வந்து அவதரித்து வளர்ந்து வந்தார்கள்.

இவர்கள், பாலியம் தொடுத்தே "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற தேவ சுருதி இலக்கண இலக்கியங்களாய், நன்னூல் பல கற்றுத் தெளிந்த அறிவும் அதற்கு இயைந்த ஒழுக்கமும்

வாய்ந்து, சாது சங்கங்களைப் பலகால் அடுத்து வழிபடும் சத்துவ இயல்பை மேற்கொண்டு, நெறி வழுவாது ஒழுகி வருவாராயினர்கள்.

இவ்வாறு ஒழுகும் பிரமசரியத்தின்மேல் சிலநாள் இல்லற ஒழுக்கம் மேற்கொண்டு, அதில் உவர்ப்புத் தோன்ற, அக்காலத்தில் இத் தனவைசியர் குலத்தில் வந்து அவதரித்துத் துறவிலும் நல்லொழுக்கங்களிலும் பிரசித்தி பெற்றுக் கோயிலூரில் இருந்த துறவு சுவாமிகளிடத்து விளங்கிய சீலங்களைக் கண்டு பிரீதி உடையவர்களாய், அவர்களிடத்தில் பல துறவு நூல்களைப் பயின்று வந்தார்கள். அந்நாளில் இடை இடையே சிதம்பராதி சிவ க்ஷேத்திர யாத்திரை செய்து, சில நாள் அங்கங்கே வசித்து, சமுசார துக்க நிவிர்த்தியில் பேராசை உடையவர்களாய்ச் சிவ கைங்கரியம் செய்து வந்தார்கள்.

இவர்களுக்கு, அந்நாளில் சிலகாலம் ஒரு வயிற்று நோய் இருந்தது. அக் காலத்திலே பாண்டி நாட்டுச் சிவ க்ஷேத்திர யாத்திரை செய்யக் கருதி, முதலில் துவாத சாந்தபுரமாகிய மதுராபுரிக்கு வந்து, பொற்றாமரையிலே ஸ்நானம் செய்து ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேச தெரிசனம் செய்து கொண்டு சிலநாள் அங்கு இருந்தார்கள். அப்போது வயிற்று நோய் சாந்தமானது தெரிந்து, இத் தலத்திலே நமக்குத் திருவருள் துணை செய்யும் என்று பொது வகையால் மதித்துக் கொண்டு, தாம் கருதி வந்தபடி ஏனைய சிவ ஸ்தலங்களுக்குச் செல்லுங்கால், வயிற்றுநோய் மீளவும்வந்தது. வரினும், உத்தேசித்தபடி அத் தலங்களைத் தெரிசித்துக் கொண்டு, மீட்டும் மதுரைக்கு வந்தார்கள். வந்த உடன் அவ் வயிற்று நோய் சாந்தமாயது. அது நோக்கி அம் மதுரா புரியில் மேலும் சிலநாள் வசிக்கும் கருத்து உடையவர்

களாய் இருந்தும், உடன் வந்த நண்பர்கள் கருத்துக்கு இணங்கி அம் மதுராபுரியினின்றும் ஒருவாருகச் சென்று கோயிலூரை அடைந்தார்கள்.

அப்போது, இடையிலே சாந்தமான வயிற்று நோய் முன்போல வர, அதுகண்டு 'இஃது என்னையோ' என்று ஆலோசித்து, இவ் வயிற்று நோய்க்குத்தான்—அநாதி தொடுத்துத் தொடர்ந்து வந்த பிறவி நோய்க்குத்தான் பரம அவுழ்தம், துவாத சாந்தபுரமாகிய மதுராபுரி வாசமே என்று துணிந்து, பசுவை நோக்கிய கன்று போல மதுரா புரியை நோக்கி, அளவு கடந்த அன்பும் ஆராமையும் பொருந்தக் கண்ணீரும் கம்பலையும் உடையவர்களாய், "எம்பிரான் எனை யேன்று கொளுங் கொலோ" என்னும் வேண்டுகோள் உடையவர்களாய்ச் சென்று மதுராபுரிக்கு வந்து, பொற்ருமரை ஸ்நானம் செய்து சித்தி விநாயக ஸ்ரீ மீஞக்ஷி சுந்தரேசர் தெரிசனம் செய்துகொண்டு அங்கு இருந்தார்கள். திரு அருளினுலே வயிற்று நோய் முற்றும் நீங்கிவிட்டது. அதனுலும், முன்னுள்ள அதி விருப்பத்தாலும், சீவ பரியந்தம் இம் மதுராபுரி எல்லையை விட்டு நீங்குவதில்லை என்று உறுதியான விரதம் மேற்கொண்டு, குடும்பப் பற்று முற்றும் நீக்கி, சிவ தீக்ஷாதி சிவ சமஸ்காரம் முற்றும்பெற்று, அம் மதுராபுரி நிவாசராய் வீற்று இருந்து அருளினுர்கள்.

அப்படி வசித்துவரும் காலம் முழுதும், தினந் தோறும் பொற்ருமரையிலும் புறத்தொட்டித் தீர்த்தத்திலும் [இப்புறத்தொட்டித் தீர்த்த ஸ்நானம், ஸ்ரீமீஞக்ஷி சுந்தரேசுரர் மகா பாதகனுக்கு ஆக்ஞாபித்த முறையை அனுசரித்து மேற்கொண்டது] ஸ்நானம் செய்து ஜெபதபதியான பூசாதி சிவ நியமங்களை முடித்துக் கொண்டு, திருவனந்தல் முதலிய ஸ்ரீ மீஞக்ஷி

சுந்தரேச பூசா காலங்களெல்லாம் தவருது தெரிசித்து, உச்சிக் காலத்துக்கு முன் மீட்டும் அத் தீர்த்த ஸ்நானம் செய்து உச்சிக் கால தெரிசனமும் செய்தலும், இதற்கிடையே அநேக பிரதட்சண நமஸ்கார பாராயணுதிகள் செய்தலும், பின்பு அபரான்ன காலத்தில் ஒருவேளை புசித்தலும், போசனனந்தரம் பொற்ருமரை ஸ்நானம் செய்து நியம அனுஷ்டான பரர்களாய்த் திருமாலேத் திருப்பணி செய்தலும், சைவ சித்தாந்த சாஸ்திர சிரவணுதிகள் புரிதலும், அர்த்தசாம பூஜா காலத்தில் தவருது தெரிசித்தலும், சொக்கநாதசுவாமி சுவர்ணரத்தினமயமான சிவிகை ஊர்ந்து எழுந்தருளும் திருக்கோலம் தெரிசித்துக்கொண்டு சென்று மீனுக்ஷியம்மையார் ஆலயத்தை அடைந்து திருப்பள்ளியறைப் பூஜா தெரிசனம் செய்தலும், அதுபூர்த்தியான பின் புறம்போந்து ஆடி வீதி பிரதக்ஷணம் செய்து சென்று நிராகார சீலர்களாய் திருமடத்தில் பூமியில் சயனித்தலும் ஆகிய நித்திய நியமங்களே மேற்கொண்டு, இந் நியமங்களில் ஒன்றேனும்-ஒரு சிறிதேனும்-ஒருதினமேனும்-ஒரு காலமேனும் தவருது திருவருளுடன் நின்றுசெலுத்த உள்ளக் கிளர்ச்சியோடு நடத்தி வந்தார்கள்.

இப்படி வருங்காலத்திலே, சுவாமிகள், சிவாலயத் திருப்பணி செய்து பெரும்பேறு அடைதற்குரிய பெருந்தவம் பூர்வம் செய்துள்ள அமராவதிபுத்தூர் வயி. நாக. ராம. வகையினரைப் பற்பல திருப்பணியில் புகுத்தி உய்விக்கத் திருவுளம் கொண்டு, முதலில் புஷ்பத் திருப்பணியில் தொடங்குவித்து, அதனைத் தாங்களே வகித்து நடத்தி வந்தார்கள். அத் திருப்பணி நடந்து வரவர, அவர்களுக்குப் பொருள் அபிவிருத்தி முதலிய லாபகரங்கள் மிகுந்து வந்தன.

அதன்பின், ஸ்ரீ மீனுக்ஷியம்பாள் கோயில் முதல் பிரகாரத்து வடக்குத் திருமதில் மிகப் பழுதாய் இருந்

தைதை நோக்கி, அம்மட்டில் அதனைச் சீரண உத்தார ணம் செய்விக்கலாம் என்று மிக இலகுவாகச் சொல்லி இணக்கி, அத் திருப்பணியில் தொடங்குவித்தார்கள். அவர்களும் நமது சுவாமிகள் சொல்வன எல்லாம் 'உத்தமோத்தம சிவபுண்ணிய விசிஷ்டமாவதொன்றே, பொருள்விருத்தி முதலிய இம்மைப் பயன்களைத் தரு தலும் நேரே தெரிகின்றோம்' என்று எழுகின்ற உள்ளக் கிளர்ச்சியால், சுவாமிகள் சொல்வதைச் செய்வதில் அதிப்பிரியர்களாய் அத் திருமதில் திருப்பணியைப் பூர்த்தி செய்தார்கள். அப்போதும் பொருள்விருத்தி முதலிய பற்பல நலன்கள் மேலும் மேலும் கைகூடி வந்தன. அதனுல் அவர்கள் மன ஊக்கம் தெரிந்து, அம் முதல் பிரகாரத் தளவரிசை—இரண்டாம் பிரகாரத் தளவரிசை-திருப்பள்ளியறை முழுதும் சொர்ணமயம் ஆக்குதல் முதலிய திருப்பணிகள் செய்வித்தார்கள்.

அவைகள் பூர்த்தியானவுடன், அம் முதல்பிரகாரத் திருமதிலில் கல்வி அறிவில்லாரும் காட்சி மாத்திரத்தில் கண்டுஇன்புறவும், கற்றவர்களும்இவைகேள்விப்பொரு ளைக்காட்சிஅளவையில் அனுபவமாகக்காட்டும்எடுத்துக் காட்டு என்று கொண்டாடவும், பெரிய புராணத்தை அனுசரித்து உண்மை நாயன்மார்களது நாம ரூப சரித் திர விசேடங்களைச் சித்திர வரிசைகளாகத் தமது திருக் கரத்தால் குறித்துக் கொடுத்து எழுதுவித்தார்கள்.

அதன்பின்பு, சுவாமிகோயில் முதல் பிரகாரத் திருமதில் பலமாய் இருந்தாலும், மண்டபங்கள் மிகப் பழுதாயும் பல முடுக்குகளாயும் பிரகாரம் வருவதற்கு முட்டுப்பாடாயும் இருந்தமையால், அவை முழுதும் பிரித்துப் புதிதாகப் பிரகாரம் நேராய் வரும்படி ஒழுங்கு பெறச் செய்து, அத் தெற்குத் திருமாளிகைப் பத்தியில்

அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பிரதிஷ்டை செய்யக் கருதி, அந் நாயன்மார்களில் சில மூர்த்திகள் இல்லாமலும், உள்ள மூர்த்திகளுக்கும் பூசை முதலியன இல்லாமலும் இரண்டாம் பிரகாரத்து நிருதி மூலையில் கவனிக்கப் படாமல் இருப்பதைக் கண்டு திருவுள்ளம் வருந்தி, அம்மூர்த்திகளுடன் மேலும் வேண்டிய மூர்த்திகளை சிற்ப முறைப்படி செய்வித்துப் பூர்த்தியாக்கி, மேற் கருதியபடி அத் திருமாளிகைப் பத்தியில் சிற்ப வர்க்க முறைப்படி பீடம் எடுத்து அதன்மேல் அவ் வுண்மை நாயன்மார்களைப் பிரதிஷ்டை செய்வித்து, ஈசுவர வருஷம் தைமாதம் நடந்த ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவர மகா கும்பாபிஷேகத்துடன் கும்பாபிஷேகம் செய்வித்து, நித்திய பூசையும் அந் நாயன்மார்கள் திருநட்சத்திரந் தோறும் விசேஷ பூசையும் நடத்திவரச் செய்தார்கள்.

அதன்மேல், சொர்ண ரத்தின ரசிதாதிகளால் ரிஷப கைலாச நந்தியாதி வாகனங்களும், முத்துக் கவச கிரீட கங்கண குண்டல கோளகாதிய திரு ஆபரணங்களும், இன்னும் பற்பல இன்றியமையாதவைகளும் செய்வித்தார்கள்.

அதன்மேல், சுவாமி சந்நிதியிலுள்ள பெரிய கீழைக் கோபுரம் பழுதாய் இருப்பதைக் கண்டு, அதனுல் அபாயம் வருமென்று கருதி கவர்ன்மெண்டார் அந்த மட்டில் சித்திரை வீதியில் சனங்கள் செல்லாமல் அடைத்து வைத்தது மன்றி, அக் கோபுரத்தையும் இடித்துவிடுவதாகக் குறித்திருந்த சமயம், அக் கோபுரத்தினுள் ஏறிப் பார்க்கப் பயந்து எல்லாரும் ஒதுங்குவது தெரிந்தும், நமது சுவாமிகள் திருவருளே துணையாகத் துணிந்து அதனுள் ஏறி எங்கும் பார்த்து இதைப் பலப்படுத்தலாம் என்று நிச்சயித்துக் கொண்டு

வெளிவந்து, வயி. நாக. ராம. நாகப்ப செட்டியார் அவர்கள் வேங்கடாசலம் செட்டியார் அவர்கள் இருவரிடத்தும் "இக் கோபுரத்தை இடிக்க விடாமல் பாதுகாத்தற்கு ஓர் உபாயம் உண்டு—அதற்கான செலவு தொகையும் சுருக்கமாகச் செய்யலாம் - அஃதாவது ஒன்பது நிலேயுள்ள இக் கோபுரத்தினது அடிநிலே மாத்திரம் முன்பக்கம் பின்பக்கத்திலுள்ள நாலு துவார பாலகர்களேயும் அந்த வரிசையிலுள்ள மற்றும் சுதைகளேயும் தெளிவாகச் செய்து வர்ணம் வைத்துவிட்டால், யாருக்கும் இடிக்க மனம் துணியாது" என்று இதமாகவும் பொருத்தமாகவும் எடுத்துச் சொல்லி, அச் சொல் நயத்தினுலேயே அவ் இருவரும் அதற்கு உடன்பாடு செயக் கண்டு, குறித்தபடியே அதி சீக்கிரம் செய்வித்துக் காட்டிய அளவில், அவ் இருவரும் மிக மகிழ்ந்து, அக் கோபுரம் முழுதும் அவ்வாறு செய்ய மிகப் பெருந்தொகை செல்லக்கூடியதாய் இருந்தும், இவ்விதமே இக்கோபுரம் முழுதும் செய்விக்க வேண்டுமென்று அவர்களே கேட்டுக்கொள்ள, அவ்வாறே ஒன்பது நிலேயும் பரிபூர்த்தி செய்வித்து, மேலும் அம்பாள் சந்நிதிக் கீழைக் கோபுரம் தெற்கு மேற்கு வடக்குக் கோபுரங்களேயும் பலப்படுத்தி அவ்வாறே செய்வித்து நிறைவேற்றினுர்கள்.

இத் திருப்பணிகள் நிகழும் காலமெல்லாம் நமது சுவாமிகள் நித்திய நியமமாக மேற்கொண்ட சுவர்ண பத்மினி ஸ்நான அனுஷ்டான செப தபதியான பூசாதிகள் அவ்வக் காலஎல்லே கடவாது புரிந்து, திருவனந்தல் முதலிய காலங்கள்தோறும் ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேச சிவதெரிசனுதி செய்து வருகின்ற அக்காலங்களின் இடையிடையே, கோபுரங்களில் ஏறிச் சிற்பர்கள் செய்துவரும் சுதா விக்கிரகாதிகளேத் தங்கள் திருக்

கரத்தால் திருத்திக் காட்டி அவ்வாறு செய்வித்தலும், அங்கங்கே சிவ பரத்துவ விளக்கமாகச் சிவ ஆகமாதி களிலுள்ள சிவ சம்பந்தமான மூர்த்திகளைத் தாங்களே குறித்துக் கொடுத்து இன்ன இடத்து இன்ன விக்கிரகங் களைச் செய்க என ஆக்ஞாபித்துப் பின்னரும் நேரில் பார்த்து திருத்தம் செய்தலும், பொற்றாமரையைச் சார்ந்த வடக்குத் திருமதிலில் ஆரம்பித்து அறுபத்து நான்கு திருவிளையாடல் சரித்திரங்களை அப் புராணத் துக்கு இஃதோர் காட்சிப் புலனும் உரையென்று அறிஞ ரெல்லாம் வியப்பச் சித்திர ரூபமாக எழுதுவித்து, யாவரும் அக்காலத்து நடந்த அத் திருவிளையாடல்களை இக்காலத்து நேரில் காணப்பெற்றோம் என்று மகிழச் செய்தலும், தங்களது அரும்பெரும் மகிமை தெரிந்து தங்களை தரிசிக்கப் பெறுதலே பெரும்பேறு என்று வந்து வணங்கும் உத்தம பக்தர்களுக்குச் சிவ சாஸ்திர உபதேசம் செய்து, கற்றதனால் ஆய பயன் வாலறிவ னாகிய சிவன் நற்றாள் தொழலே என்று உண்மை விளக்கி, அதனை இறுகப் பற்றிநிற்கச் செய்தலும், "தாம் பிரமம் கண்டவர்போல் தம்மைக் கண்டு ஆங்கு அதுவே நாம் பிரமம் என்பவர்பால் நண்ணாதே" என்பது முதலிய உண்மை நூல்களை எடுத்து விளக்கி, நாம் பிரமம் என்னும் மாயாவாதம் முதலிய அன்னிய சமயங் களில் புகுதாமல் விலகச் செய்தலும், அத்தகைய உத்தம பக்தருள்ளே பெரும் செல்வர்களா யுள்ளாரைக் கொண்டு திரு நந்தவனம் முதலிய திருப்பணி செய்வித் தலும் ஆகிய இவைபோல் இன்னும் பற்பல சிவ கைங் கரியங்களையே செய்து வந்தார்கள்.

இத்தகைய சிவபுண்ணியம் எல்லாம் செய்து முற்றியவர்களுக்கே உண்மை நாயன் மாரது ஒப்பு உயர்வு இல்லாத் திப்பிய கைங்கரியமாகிய உத்தமோத்

தம சிவ புண்ணியம் கைகூடும் என்னும் உண்மை விளக்குதலாக, "உத்தமச் சிவபக்தரில் பெரிது உத்தமர்களாய்ச் சைவப் பிரபுகுலச் சிரேஷ்டர்களாயுள்ள தேவகோட்டை மெ. வகையார் வயி. நாக. ராம. வகையார் மற்றும் அன்பர்களாகிய எல்லாருக்கும் தமது திருவுள்ளக் கருத்துத் தெரிவித்து, அவர் யாவரும் கொடுத்த பெரும் பொருள் கொண்டு ஸ்ரீ மீனுக்ஷியம்மையார் சந்நிதி வீதியிலே குருபூசை மடாலயம் செய்வித்து, அதில் வெகுதான்ய வருஷம் தை மாதத்திலே கண்ணப்ப நாயனுர் குருபூசா விசேஷ சுப தினத்திலே, முன்னரே சிற்ப விதிப்படி தங்களால் செய்விக்கப்பெற்ற உண்மை நாயன்மார் திருவுருவத் திருப்படம் பிரதிஷ்டை செய்வித்து நித்திய பூசையும் கண்ணப்ப நாயனுர் குருபூசை முதலாக நைமித்திக விசேஷ குருபூசை முதலியனவும் நடத்தி, இவைகள் எப்போதும் நடந்து வருதற்குரிய மூலதனப் பெருக்கமும் நிறைத்து வைத்து, இத்தகைய உத்தமோத்தம சிவபுண்ணியப் பிரதிஷ்டாபர்களும் பரிபாலகர்களுமாகிச் சைவ சித்தாந்த சன்மார்க்க சற்சன சேவியர்களாய் வீற்றிருந்து அருளினுர்கள்.

இந்தப் பிரகாரம் ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள் மதுராபுரியின் எல்லை கடவாது வீற்றிருந்து அருளித் தமது காலம் முழுவதும் மனம் வாக்குக் காயங்கள் மூன்றினுலும் சிவ கைங்கரியம் செய்து அமர்ந்த சிவ நியமச் சிறப்பினுலும் நிர்மல அந்தக்கரண விசேஷ நிரந்தர சிவத் தியான ஞான யோக சீலத்தினுலும் தங்கள் காலம் முழுதும் சிவ விஷயமாகவே செலுத்தி வந்தார்கள்.

இவ்வாறு ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள் முப்பத்தைந்து வருஷ காலம் சிவானுபூதிப் பெரும் செல்வர்களாய், நம்மனோர்க்கெல்லாம் சிவ நியம நிதரிசன பூதர்களாய்

இம் மதுராபுரி எல்லை கடவாது வீற்றிருந்து அருளி, கலியப்தம் ௫௲௮௭, பார்த்திப வருஷம் மாசிமாதம் ரு-ம் தேதி, சோம வாரம், துவாதசி திதி, திருவாதிரை நட்சத்திரம் மிதுன லக்கினம் கூடிய சுபதினத்திலே அகண்டாகார சச்சிதானந்த சொரூப ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேசுரர் திருவடி நிழலில் கலந்தருளினுர்கள்.

இவர்களால் செய்யப்பெற்ற திருமாலைத் திருப்பணி நியமமும், உண்மை நாயன்மார் குருபூசை நியமமும், திரு நந்தவனத் திருப்பணி முதலிய பலவகைத் திருப்பணிகளும், மதுரை திருப்பணியாளராகிய வயி. நாக. ராம. வகையாராலும் ராம. மெ. வகையாராலும் நடைபெற்று வருகின்றன.

இவர்களால், சைவ சமயத்தில் சத்தியபுத்தியும் சிவபக்தியும் திராவிட வேத பாராயண சிவபூசாதி சிவ நியமமும் சிவ சாஸ்திரப் பிரக்ஞையும் பெற்றுச் சீடர்களாகும் பெருந்தவம் வாய்ந்தோர் நம்மனோர் பலர்.

நம்மையெல்லாம் தங்கள் சீடர்களாக ஒப்புக்கொண்டு நம்மை வழிப்படுத்தியது நமது குருமூர்த்திகள் ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள். ஆதலால், குருவைத் துதித்தல் உத்தம சிவபுண்ணியம் என்பது பெரியோர்கள் ஆணை. ஆதலால், குரு ஸ்துதி ரூபமாகிய 'ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள் பதிற்றுப்பத்து அந்தாதி' என்னும் நூலை, அறிவில் சிறியனுகிய தமியேன் குருப் பிரசாத சித்தியின் பொருட்டுச் செய்தேன்.

முற்றிற்று.